[29th August 1970

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஹாஸ்பட்டு, விசாகப்பட்டினம் ஆகிய உருக்காலை திட்டங்களுக்காக காத்திராமல் சேலம் உருக்காலை திட்டத்தை தொடங்குமாறு இந்திய அரசிடம், இவ்வரசு முறையிட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட பதில்யாது?

(அ) & (இ):

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மத்திய அரசு அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் நடந்த உரையாடல்களின்போது, சேலம் உருக்காலைத் திட்டம் முன்னோடியான நிலையை அடைந்திருப்பதால், ஹாஸ்பெட், விசாகப்பட்டினம் ஆகிய மற்ற இரண்டு இடங்களிலும் உருக்காலை நிறுவுவதற்கான ஏற்பாடுகளில் தயக்கம் காரணமாக, சேலம் உருக்காலைத் திட்டம் துவங்குவது தடைப்படக்கூடாது என்று இந்த அரசு வலியுறுத்திக் கூறியிருக்கிறது. மற்ற இரு ஆலைகள் துவக்குவதில் உள்ள தாமதத்தை முன்னிட்டு சேலம் உருக்காலை துவக்குவதில் எந்தவிதத் தாமதமும் இருக்காது என்று இந்திய அரசு தெளிவுபடக் கூறியுள்ளது.

THIRU A. R. DAMODARAN : May I know from the Hon. the Minister for Industries whether the Government of Tamil Nadu have any information whether any other Steel Factory in India has been permitted to make the special steel for which the Salem Steel Plant is now sought to be licensed ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : 'பிராடக்ட்ஸ் மிக்ஸ்' என்று சொல்லப்படுவது எந்த அளவுக்கு நம்முடைய சேலம் உருக்காலையில் வேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லுமாறு தஸ்தூர் கம்பெனியை நாமும் மத்திய சர்க்காரும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் முடிவு சொன்ன பிறகு, அதிலிருந்து வேறு உருக்குத் தொழிற்சாலையில் என்ன என்ன பொருள் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்ல முடியும். உதாரணத்திற்கு, அலாய் ஸ்டீல் என்று துர்காபூரில் செய்கிறார்கள். குறைந்த அளவில்தான் செய்கிறார்கள். நாம் உற்பத்தி செய்கிறபோது, பிற உருக்காலைகளில் என்ன என்ன தயாராகின்றன என்பதைக் கணக்கில் கொண்டு, நாம் அதற்கு ஏற்றவாறு உற்பத்தியைச் செய்வோம். தற்போது மற்ற உருக்காலைகளில் என்ன என்ன பொருள்கள் உற்பத்தியாகின்றன என்ற தகவல் இல்லை.

Pandiar-Punnampuzha Hydro-Electric Scheme

(†) *19. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether execution of Pandiar Punnampuzha Hydro-Electric Scheme has been stopped ; and

(*b*) if so, the reasons therefor ?

(†) Postponed from the List of Questions for 27-8-70.

29th August 1970]

பாண்டியாறு—புன்னப்புழா புனல் மின் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பாண்டியாறு-புன்னப்புழா புனல் மின் திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ.பி. ராமன் : (அ)வும் (இ)யும் : பாண்டியாறு, புன்னப்புழா திட்டம் நிறுத்தப்படவில்லை. ஆனுல், ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அப்பகுதி முழுவதையும் கையகப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதை முன்னிட்டு, இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் வேகம் தற்காலிகமாய்க் குறைக்கப்பட்டது. பாண்டியாறு—புன்னப் புழா புனல் மின் சக்தித் திட்டத்தின் கடைகோடிப் பகுதி நீரைத் தமிழ் நாட்டில் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத் துடன், இத்திட்டத்தை மறு ஆய்வு செய்யும் செயற்குறிப்பு ஒன்றும் உள்ளது. அத்தகைய ஆய்வு நடத்தப்படும் வரையில் மேலும் பணி தொடருவதை தள்ளி வைக்குமாறு அரசு கட்டளைகள்பிறப்பித்துள்ளது.

Reserved Forest in Srivilliputtur Taluk

(†)*20. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether representations have been received through the Collector of Ramanathapuram District for the free assignment of lands in the area classified as Reserved Forest in Srivilliputtur Taluk called 'புல் வெளி காடு' to deserving landless poor of that area ; and

(*b*) if so, the action taken thereon ?

ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில் உள்ள ஒதுக்கக் காட்டுப் பகுதி

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில், ஒதுக்கக் காடாக வகை படுத்தப்பட்ட "புல் வெளிக் காட்டு" பகுதியில் உள்ள நிலங்களை, அப்பகுதியில் நிலமற்ற ஏழைகளுக்கு உரிமையாக்க அதை இலவசமாக நில ஒப்படை செய்ய வேண்டுமென இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக முறையீடுகள் வரப்பெற்றுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. டி. சந்தோஷம் : கான்சாபுரம் பஞ்சாயத்தில் இதுபற்றித் தீர்மானம் போட்டது எனக்கு நேரில் தெரியும். டிஸ்ட்ரிக்ட் டெவ லப்மெண்ட் கவுன்சிலில் கூட இதைப்பற்றிக் கலெக்டரிடம் கேட்டு விவாதிக்கப்பட்டது. இதுவரை அமைச்சர் அவர்களுக்கு இந்தக்

(†) Postponed from the List of Questions for 27-8-70.